





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க. சட்டத்துறை நடத்திய பேச்சுப் போட்டியில் விழுப்புரம் மாவட்டம் வழக்கறிஞர் அணி சார்பாக கலந்து கொண்டு முதல் பரிசு பெற்ற விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி மாணவர் கணேஷ் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியிடம் வாழ்த்துக்களைப் பெற்றார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், விழுப்புரம் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை. சுரேஷ், துணை அமைப்பாளர்கள், காளிதாஸ், விசுவநாதன், சிவ செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.

### விவசாயிகள் - மக்களின் தேவைகளுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்தி

# கூட்டுறவுத் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது!

## சிவகங்கை கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு!



சிவகங்கை. நவ. 22 -

சிவகங்கை மாவட்ட கூட்டுறவுத் துறையின் சார்பில் 70 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா சிவகங்கை முத்துமகாலில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. மண்டல கூட்டுறவு துணைப் பதிவாளர் திருமதி கோ. ஜானு வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 3163 பயனாளிகளுக்கு ரூபாய் 34 கோடியே 28லட்சம் மதிப்பிலான கடன் உதவிகளை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

மக்களின் தேவைகளை எப்போதும் நிறைவேற்றும் துறையாக கூட்டுறவுத் துறை விளங்கி வருகிறது. 1904 ஆம் ஆண்டில் திருவள்ளூர் கிராமத்தில் முதலில் கூட்டுறவு சங்கம் துவங்கியது. அதே நாளில் சென்னை திருவல்லிக்கேணியில் கூட்டுறவு சங்கம் துவக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை மக்களின் தேவைகளை அறிந்து மக்களைத் தேடி பணிகளை கூட்டுறவுத் துறை சிறப்பாக செயலாற்றி வருகிறது. கூட்டுறவுத்துறை தமிழகத்தின் தாய் பிறப்பிடமாகும். அது இன்று ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது. பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் கூட்டுறவுத்துறையின் இத்தகைய வளர்ச்சிக்கு மூல காரணமாக விளங்கி னார்கள்.அவர்களது வழியில் முதல்வர் தளபதி அவர்களும் கூட்டுறவுத் துறை சிறப்பாக பணியாற்ற தனி கவனம் செலுத்தி அதற்கான நிதிகளை ஒதுக்கீடு செய்து வருகிறார்.

இந்த நிலை உயர அரசு மட்டும் காரணமல்ல. கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் விவசாயிகளும் அதிகாரிகளும்தான் காரணம் ஆவார்கள் . கூட்டுறவுத் துறை வளர்வதால் தனிநபர் வருமானம் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. தமிழக முதல்வர் அவர்கள் தேர்தலில் பல வாக்குறுதிகளை அறிவித்தார்கள் . அதில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபாய் 5000 வழங்க வேண்டும் என்று அப்போதைய அ.தி.மு.க. முதல்வர் எடப்பாடிக்கு கோரிக்கை வைத்தார். ஆனால் ரூபாய் 1000 மட்டும் வழங்கிவிட்டு எடப்பாடி அந்த கோரிக்கையினை நிராகரித்தார். தேர்தல் வாக்குறுதியாக முதல்வர் தளபதி அவர்கள் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் தான் கோரிக்கை வைத்ததில் ரூபாய் 5000த்தில் ஆயிரம் வழங்கியது போக மீதி ரூபாய் நாலாயிரம் வழங்கப்படும் என்று கூறினார்.

தளபதிஅவர்கள்முதல்வராக பதவியேற்றதும் அதை இரண்டு தவணையாக ரூபாய் 2000 மொத்தம் ரூபாய் 4000த்தை கூட்டுறவு துறை மூலம் 2 கோடியே 20 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க உத்தரவிட்டார். கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நேரு பிறந்த நாளான நவம்பர் 14 முதல் 20ம்தேதி வரை கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒரு வார காலம் நடைபெறுகின்ற விழாவின் மூலம் மக்களிடம் கூட்டுறவுத்துறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த விழாவின் முக்கிய நோக்கம் ஆகும். ஒரு வாரத்திற்கு 38 மாவட்டங்களில் தமிழகம் முழுதும் கூட்டுறவு வார விழாக்கள் நடைபெற்று வருகிறது. இந்தியாவிலேயே பயிர்க் கடன் அதிகமாக வழங்கும் மாநிலம் தமிழகம் ஆகும். முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பு ஏற்றதும் 13கோடியே 443 லட்சம் வழங்கப்பட்டதில் 17 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றார்கள். இதற்கு ரூபாய் 12 ஆயிரம் கோடி தான் இலக்காகும். ஆனால் ஒரு கோடியே 443 லட்சம் அதிகமாக கொடுக்கப்பட்டது . இந்த ஆண்டு 2023. 24 ஆம் ஆண்டில் ரூபாய் 16 ,500 கோடி கூட்டுற வுத் துறை மூலம் பல்வேறு கடன்கள் வழங்கப்பட உள்ளது. சிறு தொழில் முதல் பெரிய தொழில்கள் வரை பல்வேறு வகையான கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

**விவசாயிகளுக்கு நேரடி பலன்!**

கால்நடை வளர்ப்பு கடன் பயிர்க் கடன், நகைக் கடன், சுயதொழில் கடன் மற்றும் பல்வேறு வகையிலான கடன்கள் வழங்கப்படுகின்றது . இதற்கு வட்டியும் குறைந்த அளவில் பெறப்படுகின் றது. விவசாயிகள் கடனைப் பெற்று உரிய காலத்தில் செலுத்தி விட்டால் அதற்கு வட்டி செலுத்த தேவையில்லை என்று முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவினை தொடர்ந்து செயல்படுத்துமாறு தற்போதைய முதல்வர் தளபதி அவர்களும் உத்தரவிட்டுள்ளார் .

மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று முதல்வர் அவர்கள் விரும்புகிறார். விவசாயிகள் நேரடியாக பலன் அடையும் வகையில் கூட்டுறவு சங்கம் செயல்பட வேண்டும். அதற்கான திட்டங்களை தீட்ட வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார். கூட்டுறவு சங்கத்தின் பொறுப்பாளர்கள் பதவி முடிவடைந்து விட்டது.

**கூட்டுறவு சங்கத் தேர்தல்!**

கூட்டுறவு சங்கத்தேர்தல் நடத்துவது குறித்து நீதிமன்றம் புதிய உத்தரவினை பிறப்பித்துள்ளது நீதிமன்றம் இது குறித்து சில அறிவுரைகளை வழங்கியுள்ளது.25ஆண்டுகளுக்குமுன் மரணம் அடைந்தவர்கள் இன்று வரை உறுப்பினராக உள்ளார்கள். அவர்களை நீக்கி விட்டு புதிதாக உறுப்பினர் சேர்த்து புதிதாக வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட். டுள்ளது . அதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

அந்த பணி முடிவடை ந்ததும் கூட்டுறவு தேர்தல் ஆணையத்தின் மூலம் தேர்தல் நடைபெறுவது குறித்து விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும். ஜனநாயகத்தின் மூலம் தேர்தல் நடத்தி மக்களின் பிரதிநிதிகள் ஆட்சி பொறுப்புக்கு வர வேண்டும் என்று விரும்பும் ஒரே இயக்கம் தி.மு.க. ஒன்றுதான் ஆகும். அதை தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் முதல்வர் தளபதி அவர்களும் தொடர்ந்து உறுதியுடன் செயல்படுத்தி வருகிறார்கள். அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற வில்லை. தி.மு.க. நீதி மன்றத்திற்குச் சென்றதன் மூலம் தேர்தல் நடைபெற்றது. தளபதி அவர்கள் பதவியேற்றதும் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது என்பது உங்களுக்கு தெரியும். கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் முடிந்து புதிய பொறுப்பாளர்கள் பதவிஏற்கும் வரை தற்பொழுது பணியாற்றும் தனி அலுவலர்கள் கூட்டுறவு சங்கங்களை சிறப்பாக முறையாக நடத்திட வேண்டும்.தமிழ்நாட்டில் உள்ள 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் லாபத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்திய அளவில் இது போன்று எந்த மாநிலத்திலும் இல்லை.

**நலிவுற்ற வங்கிகளை சீரமைக்க நிதி!**

சிவகங்கை மாவட்டத்தில் நலிவுற்று செயல்படாமல் இருந்த மானாமதுரை கூட்டுறவு நகர வங்கி சீரமைக்க ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அது மீண்டும் செயல்படும் வகையிலான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதே போல் காரைக்குடி நகர கூட்டுறவு வங்கியும் செயல்படாமல் உள்ளது . மீண்டும் செயல்படுவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது .இதுபோல் மாநிலம் முழுவதும் நலிவுற்று செயல்படாமல் உள்ள கூட்டுறவு நகர வங்கிகள் மீண்டும் செயல்பட தனி சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 211 வகையான கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது.

இதுவரை தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற இரண்டரை ஆண்டுகளில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 71456 உறுப்பினர்களுக்கு ரூபாய் 374.கோடியே18 லட்சம் மதிப்பிலான பயிர் கடன் உதவி, 7853 உறுப்பினர்க ளுக்கு ரூபாய் 48 . 35 கோடியில் கால்நடை பராமரிப்பு கடன் உதவி,2 லட்சத்து 47 ஆயிரத்து 920 உறுப்பினர்களுக்கு 1519.03கோடியில்நகைகடன்உதவி, 2834 குழுக்களுக்கு 134.98 கோடியில் சுய உதவி குழு கடன் உதவி 1368 உறுப்பினர்களுக்கு ரூபாய் 476 கோடியில் சிறுவகை வணிக கடன் உதவி, 30 உறுப்பினர்களுக்கு ரூபாய் 2.01 கோடியில் கோடியில் வீட்டு வசதி கடனுதவி 90 உறுப்பினர்களுக்கு ரூபாய் 4.24 கோடியில் வீட்டு அடமான கடன் உதவி, 576 உறுப்பினர் களுக்கு ரூபாய் 2.75 கோடியில் மாற்றுத்திறனாளிகள் கடன் உதவி, 83 உறுப்பினர்களுக்கு 0. 93 கோடி மதிப்பீட்டில் டாப் செட்கோட் கடன் உதவி, 140 உறுப்பினர்களுக்குரு பாய் 1.59 கோடியில் தாட்கோ கடன் உதவி,3710 உறுப்பினர்களுக்கு 18. 18 கோடியில் மகளிர் தொழில் முனைவோர்களுக்கு கடன் உதவி, 275 உறுப்பினர் களுக்கு ரூபாய் 3.கோடியே 4லட்சம்மதிப்பிலான பணிபுரியும் மகளிர் கடனுதவி 98 உறுப்பினர் களுக்கு. 0. 18 கோடியிலான கைம்பெண் கடன் உதவி, 17 63 உறுப்பினர்களுக்கு ரூபாய் 9.49 கோடி பண்ணை சார கடன் உதவி, 96 உறுப்பினர் களுக்கு ரூபாய் ரூபாய்2. 56 கோடியில் தானிய ஈட்டு கடனுதவி, 80 73 உறுப்பினர்களுக்கு 1, கோடியே 409 லட்சத்து 70ஆயிரம் இதர கடன் உதவிகள், ஆக மொத்தம் 4,18,657 நபர்களுக்கு3,537 12ஆயிரம் கோடி மதிப்பீட்டிலான கடன் உதவிகள் தற்சமயம் வரை வழங்கப்பட் டுள்ளது.

**கூட்டுறவே நாட்டுயர்வு!**

இன்றைய நிகழ்ச்சியில் 3163 நபர்களுக்கு பயிர்க் கடன் 2088பேர்களுக்கும், கால்நடை பராமரிப்புக்கடன் 888 நபர்களுக்கும் மகளிர் சுய உதவிக் கடன் 160 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் கடன் 18 நபர்களுக்கும், டாப் செட்கோ ஆழ்துளை கிணறு கடன் 2 நபர்களுக்கும் மத்திய காலக்கடன் ஏழு நபர்களுக்கும் ஆக மொத்தம் 3163 நபர்களுக்கு ரூபாய் 34கோடியே 28 லட்சம் மதிப்பிலான கடன்கள் வழங்கப்பட உள்ளது. கூட்டுறவுத்துறை மூலம்இத்தகைய மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தும் தமிழக முதல்வர் அவர்களுக்கு மக்கள் தொடர்ந்து ஆதரவு தந்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவே நாட்டுயர்வு என்றஅடிப்படையில் கூட்டுறவுத் துறை சிறப்பாக செயல்பட்டு வருவதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். என்று இந்த விழாவின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசினார்.

விழாவில் 18 சிறந்த கூட்டுறவுசங்கங்கள், அதிக அளவில் ரத்ததானம் வழங்கிய நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் மற்றும் பணியாளர்களை பாராட்டி கேடயமும் சான்றிதழ்களையும் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட அளவில் சிறப்பாக லாபத்துடன் செயல்படும் திருப்புவனம் பால் கூட்டுறவு சங்க தலைவர் த.சேங்கைமாறன், செயலாளர் கிருஸ்ணன், இளையான்குடி கூட்டுறவு சங்க தலைவர் பி.ஏ.நஜ்முதீன் ஆகியோரை பாராட்டி அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் கேடயம் வழங்கி பாராட்டினார்.

இந்த விழாவில் திருப்புவனம் பால் கூட்டுறவு சங்கத் தலைவர் த. சேங்கை மாறன், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரைஆனந்த், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவர் கே .எஸ்.எம். மணிமுத்து, மாவட்ட கவுன்சிலர் நாகனி செந்தில் குமார் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். மாவட்ட துணைப் பதிவாளர் பாலச்சந்தர் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் கே.சி.ரவிச்சந்திரன் . துணைப் பதிவாளர்கள் மா.க. நாகராஜன், வா. ஸ்ரீமான், மு.க பாரதி ,இ. சேதுராமன், இரா. குமரன், கூட்டுறவு வங்கி பொது மேலாளர் மலைச்சாமி உட்பட உள்ளாட்சி பிரதிநிதிகள் கூட்டுறவு சங்க அதிகாரிகள் பொதுமக்கள், விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.


கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் எஸ்.கே.நவாப் அவர்களின் ஏற்பாட்டில்
22.11.2023 புதன்கிழமை கிருஷ்ணகிரி பெங்களூர் நான்கு வழிச்சாலை மேம்பாலம் அருகில்
முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
திருவுருவச் சிலை திறப்பு விழா
நாள் : 22.11.2023 புதன்கிழமை
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
தே.மதியழகன் MLA
இல்லத் திருமண விழா
கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர்
எஸ்.கே.நவாப்
கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர்
தி.மு.க. மாநில தலைமை செயற்குழு உறுப்பினர்
B.பரிதா நவாப் B.Sc., LLB.,
இல்லத் திருமண விழா
மணமக்கள்
N.அமீர் சுஹேல் MBA., - A.மாதுளா BA., MIB.,
நாள் : 23.11.2023 வியாழக்கிழமை காலை 10.30 மணி
இடம் : குறிஞ்சி மஹால், புதிய பேருந்து நிலையம் பின்புறம், கிருஷ்ணகிரி.
முத்தமிழறிஞர் கலைஞர்
திருவுருவச் சிலையை திறந்து வைப்பவர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்கள்
தலைமை
துரைமுருகன்
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
கே.என்.நேரு
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்
அர.சக்கரபாணி
மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சர்
தே.மதியழகன் MLA
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
தளி ஒய்.பிரகாஷ்
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர்
மற்றும்
அமைச்சர் பெருமக்கள், தலைமை கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், ஊரக மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
அனைவரையும் அன்புடன் வரவேற்கும்
எஸ்.கே.நவாப்
கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர்
B.பரிதா நவாப் B.Sc., LLB.,
கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர்,
தி.மு.க. மாநில தலைமை செயற்குழு உறுப்பினர்
ARASU ARTS
கிருஷ்ணகிரி நகர தி.மு.க.